
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | ஏப்ரல் 1993 | இதழ் 4



வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வு வகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. ஆசிரியர் கடிதம் 1-2
2. மானிடத்தின் மாபெரும் தவறு 3-6
3. திருமுழுக்கு என்ன செய்யாது? 7-10
4. பெண்கள் ஜெபம் செய்யலாமா? 11-15
5. மகிழ்ச்சியின் இரகசியம் 16-19
6. சிலுவை வார்த்தை 20-23
7. EZS ஒரு சிறந்த தந்தை 24-26
8. வேதாகமம் மட்டும் போதுமா? 27
9. நான் விசுவாசிக்கிறேன் என்றாலும்.... 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 APRIL—1993 Issue 4

## ஆசிரியர் கடிதம்

*அன்புமிக்க வாசகப் பெருமக்களே!*

*சத்தியம் விரும்பிகளாகிய உங்கள் யாவரையும் நல்லவராகிய நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துவதில் மகிழ்வு அடைகிறேன்.*

*பத்திரிக்கைப் பணிக்காகத் தன்னுடைய நாடி நரம்புகளை யெல்லாம் செயல்படுத்தி, **''திருமறை ஆசான்''** மாத இதழை மிகச் சிறப்புடன் நடத்தி வந்த **''ஆசான்''** இன்று நம்மிடையே இல்லை. நாம் எவரும் சற்றும் எதிர்பாராத நிலையில், நமது ஆசான், ஆண்டவரால் பரம இளைப்பாறுதலுக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்.*

*''ஆசான்'' அமரரான பொழுது, திருமறை ஆசானைக் குறித்து ஒரு பெரும் கேள்வி எழுந்தது. சாத்தானின் கைக்கூலி களாய் பொய் தீர்க்கதரிசிகள் செயல்பட்டு, கள்ள உபதேசங்களை ஒளியின் தூதனுடைய வேடத்தில் வியாபாரம் செய்து, ஜனங்-களின் ஆன்மீக நிலையை, சூன்யத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருந்த சமயத்தில், அந்த கள்ள உபதேசங்களை சற்றும் சளைக்காமல் எதிர்த்துப் போராடி, பொய் தீர்க்கதரிசிகளை சமுதாயத்துக்கு அடையாளம் காட்டி, ''கள்ளப் போதகர்களே ஜாக்கிரதை'' ''ஜனங்களே உஷார்'' என்று எச்சரித்து, **'கிறிஸ் தவ அறம்'** தழைக்கப் பாடுபட்டு, தமிழ்பேசும் நல்லுலகமெங்-கும் வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்த ''திருமறைஆசான்'' தொடர்ந்து தரம் மாறாமல் நடக்குமா என்பதே அக்கேள்வி.*

எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கின்ற நமது தேவன், இந்த சிறப்பு மிகுந்த 'திருமறை ஆசான்' இதழும் தொடர்ந்து தரமுடன் வெளிவரும்படி, சகல கிருபை-களையும் செய்தார். என்ன நோக்கத்திற்காக இந்த மாதஇதழ் தேவனால் ஆரம்பிக்கப்பட்டு, மறைந்த ஆசானால் சிறப்புற நடத்தப்பட்டதோ அந்த நோக்கம் இம்மியளவும் பிசகாமல் வெளி வரும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கி-றேன்.

இந்த தருணத்தில் ''ஆசான்'' அவர்களின் மறைவுக்கு தங்களின் அனுதாபங்களை நேரிலும் கடிதங்கள் மூலமும் வெளிப் படுத்திய எண்ணற்ற நல்ல உள்ளங்களுக்கும், பத்திரிக்கை தொடர்ந்து வெளிவர முயற்சி எடுங்கள் என்று ஊக்கப்படுத்திய வாசகர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எதிர் வரும் காலங்களில், ''திருமறை ஆசான்'' தொடர்ந்து '**காங்கயம்**' நகரிலிருந்து வெளிவரும். இனிமேல் உங்கள் கடிதத் தொடர்புகள் அனைத்தையும் கீழே கொடுக்கும் விலாசத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டுகிறேன். உங்கள் ஆலோசனைகளையும் ஆதரவையும் முன்போலவே அடியேன் எதிர்பார்க்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சிறப்புமிக்க இந்தப் பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பேற்றிருக்கும் அடிமைக்காக, உங்கள் தனி ஜெபங்கள், குடும்ப ஜெபங்கள், குழு ஜெபங்கள், சபையின் ஜெபங்கள் இவைகளில் மன்றாடும்படியாக மன்றாடுகிறேன். உங்கள் ஊக்கமான ஜெபம், இந்தப் பத்திரிக்கை மேலும், மேலும் வளரவும் அநேகரை கர்த்தரிடம் கொண்டு வரவும் நிச்சயம் உதவும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங் கூட இருப்பதாக.

இதழ் ஆசிரியர்,
E.Z.S. **ராஜநாயகம்**


**தொடர்பு முகவரி**
ஆசிரியர்,
திருமறை ஆசான்
தாராபுரம் ரோடு
**காங்கயம்-638 701**
**பெரியார் மாவட்டம்.**

ஆசிரியவுரை

# "மானிடத்தின் மாபெரும் தவறு"

மனிதன் தவறு செய்வதென்பது, ஏதோ இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டுவிட்ட ஒரு விபத்து அல்ல. பிதாவாகிய தேவனால் மானிடம் சிருஷ்டிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தில் அவனை குடியமர்த்தினதிலிருந்தே தொடர்ந்து வருகின்ற ஒரு முடிவற்ற செயல் தான் தவறு என்பது. அன்று, சத்துருவாகிய சாத்தானின் வஞ்சக வார்த்தைகளால் கீழ்ப்படியாமை என்கிற விஷ விதை விதைக்கப்பட்டு, ஏவாள், ஆதாம் இவர்கள் மூலம் பாய்ச்சப்பட்டு, தொடர்ந்து வந்த நமது முன்னோர்களால் உரமிடப்பட்டு, கண்ணும் கருத்துமாக, காலம் காலமாக பராமரிக்கபபட்டு வரும் இந்த நச்சு மரம், இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்து மானிடத்தை அலைக்கழித்துக் கொண்டுள்ளது. இந்த விருட்சத்தின் கீழாக சுகமாக இளைப்பாறிக் கொண்டிருக்கும் மானிடம், இந்த விருட்சம் எவ்வளவு அழகாக, சௌகரியமாக இருக்கிறது என்று பாராட்டுமளவிற்கு நிலமை உள்ளது. இந்த நச்சு மரத்தின் சுகத்தை அனுபவிக்காத மனிதன் ஒருவனும் இல்லை. இந்த அவல நிலையைத் தான் பவுலடியார், "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்று சொல்லுகிறார். (ரோம 3:23).

மானிடத்தின் இந்த தவறுகளுக்கெல்லாம், சிகரமாக இருப்பது, "ஆவிக்குரிய காரியங்களுக்கு, சரீரப் பிரகாரமான பொருள்" எடுத்துக் கொள்வது தான். ஏன், இது **மாபெரும்தவறு** எனில் இதன் விளைவு அதி பயங்கரமானது. தேவனால் மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தையே சிதைத்து, சின்னாபின்னமாக்குவது.

ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியாமல், மானிடம் எங்கெல்லாம் தவறிழைத்திருக்கிறது என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

## யூதர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ளவில்லை: (யோவான் 2:18-22)

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக, நம்மைப் போல் ஒரு மனிதராய், நமதாண்டவர் நன்மை செய்கிறவராய் இப்பூவுலகில் சுற்றித் திரிந்து, ஊழியம் செய்த நாட்களில், யூதமக்கள் ஆண்டவரின் அருளுரையை புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டனர் ஏன், புரிந்து கொள்ளவேயில்லை என்று சொன்னாலும் தவறில்லை, புரிந்து கொண்டிருந்தால்" பாவம் அறியாத இயேசுவை சிலுவையில் அறையும்" என்றும், "பாதகன் பரபாசை விடுதலை செய்யும்., என்றும் ஏக சத்தமாய் கூக்குரலிட்டிருப்பார்களா?

ஒரு முறை கிறிஸ்துவானவர், பஸ்கா பண்டிகை சமீபித்திருந்த நாட்களில், எருசலேம் பட்டணத்தில், யூத மக்களால் போற்றப்பட்டு வந்த புகழ்மிக்க தேவாலயத்தைக் குறித்து, ''இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்'' என்றார். (யோவா 2:19). அப்பொழுது அங்கு கூடியிருந்த யூதர்கள் அதிர்ச்சியடைந்து, இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருடம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்கு உள்ளே எழுப்புவீரோ? என்றார்கள்.

ஆனால் இயேசுவோ, அங்கே தன்னுடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். மாத்திரமல்ல, தன்னுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அங்கே முன்னறிவிக்கிறார். மோசேயின் பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள், தீர்க்க தரிசனங்களை அறிந்தவர்கள், கிறிஸ்துவானவர் பேச்சின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் தவறு செய்கிறார்கள் என்னே பரிதாபம்!

**சீடர்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை (மத் 17: 1-8)**

நமதாண்டவர் பரம் ஏறுவதற்கு, சரியாக ஒரு வருடம் முன்னதாக, தனக்கு நெருக்கமான சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு இவர்களை அழைத்துக் கொண்டு, **மறுரூபம்** அடைந்த மலை என்று நம்பப்படுகின்ற எர்மோனுக்கு செல்கிறார். அங்கே சீடர்கள் கண்ட காட்சி அவர்களை பிரமிக்க வைத்தது. மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசிக் கொண்டிருக்கிறதைக் கண்டார்கள். எப்போதும் அவசரகோலத்தில் செயல்படும் பேதுரு, ''அங்கே தானே கூடாரம் போடலாம்'' என்கிறார். அதுவும் எப்படி மூன்று பேருக்கும் மூன்று கூடாரமாம்.

ஆண்டவராகிய இயேசுவின் மீது வைத்த அபார பக்தியினால் தான், பேதுரு அப்படிச் சொன்னார் என்று நாமறிவோம் ஆனால் மறுரூப மலையில் கூடாரவாசியாவதற்கா பரலோகம் விட்டு பூலோகம் வந்தார்? மறுரூபமாகி வெளிப்படுத்தின காட்சி பேதுருவால் கூடாரம் போடுவதற்கா? இல்லை இல்லவே இல்லை. அங்கே புதைந்து கிடந்த ஆவிக்குரிய காரியங்கள் ஆண்டவருக்கு நெருக்கமாக இருந்த இவர்களுக்கு ஏன் விளங்காமல் போனது. காலமெல்லாம் கூட இருந்து போதனை கேட்டவர்களல்லவா இவர்கள். ஆச்சரியம்! சரீர கண்ணோட்டம் மேலோங்கி இருந்தது? தான் இதற்குக் காரணம்.

நண்பரே, **பக்தியின் மிகுதியால்** நாம் தவறு செய்தாலும் தவறு, தவறுதான் என்பதை மறந்து விட வேண்டாம்.

சரி, இங்கே என்ன ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது என்கிறீர்களா? மறுரூப மலையில் ஆண்டவரோடு மோசேயும், எலியாவும்

காட்சி தருகிறார்கள். மோசே நியாயப்பிரமாணத்தின் தந்தை. எலியா தீர்க்கதரிசிகளில் மகா தீர்க்கன். பிரமாணங்களின் பிரதிநிதி மோசே. தீர்க்கதரிசனங்களின் பிரதிநிதி எலியா. இருவரும் கிறிஸ்துவுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒளியுள்ள மேகம் அவர்கள்மேல் நிழலிடுகிறது (V 5). அந்த மேகத்திலிருந்து சத்தம் உண்டாகிறது. ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். **இவருக்கு செவி கொடுங்கள்''** என்று. இயேசுவானவர், ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் வானத்திலிருந்து சத்தம் வந்தது. அது, ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று மட்டுமே உரைத்தது (மத் 3:17). மறுரூப மலையில் மட்டும்தான், ''இவருக்கு செவி கொடுங்கள்'' என்று சத்தம் வந்தது என்பதை கூர்ந்து கவனிப்பது மிக அவசியம். பிறகு சீஷர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ''இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை'' (V 8).

மோசேயும், எலியாவும் மறைந்து போனது நியாயபிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் முடிவுக்கு வரப்போகிறது என்றும் சீடர்களுக்குக் காட்டுவது தான் **அந்தக் காட்சியின் நோக்கம்.** அது அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? ஆனால் அந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள சீடர்களால் அப்பொழுது முடியவில்லை. பின்னொரு நாளில் பேதுரு, அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறான் (II பேது 1:16-18).

**ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ளவில்லை!** *(அப் 14:8-18)*

முதலாம் நூற்றாண்டில், சத்தியம் திக்கெட்டும் பரவி வெற்றிநடை போட்டு வந்த காலத்திலும் இந்த நிலை இருக்கவே செய்தது. புறமார்க்கத்தாருக்கு நற்செய்தியைப் பரப்ப விசேடமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட பவுல், தன்னுடைய முதலாவது சுவிசேஷ பயணத்தின் ஒரு பகுதியாக லீஸ்திராவுக்கு வருகிறார். அங்கே தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாய் இருந்த ஒரு மனிதன் பவுலால் சுகமாக்கப்படுகிறான்(V 10). இந்த அற்புதம் கூடியிருந்தவர்களின் புருவத்தை உயர்த்தியது. பிரமித்து நின்றனர். பிரதிபலனாக ஏதாவது செய்ய வேண்டுமென்று துடித்தனர். ஆனால் செய்ததைத் தான் சரியாக செய்யவில்லை, பரிதாபம்.

பிறவி சப்பாணி சுகமாக்கப்பட்டதில் மறைந்திருந்த ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலடியாரின் வார்த்தையின் வல்லமையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அந்த

வார்த்தைக்கு வல்லமை எப்படிக் கிடைத்தது என்று சிந்திக்க முற்படவில்லை. அந்த வல்லமையைக் கொடுத்த தேவன் யார் என்று வினவவில்லை. அந்த மகத்தான தேவனோடு என்னுடைய உறவு எப்படியிருக்கிறது என்று ஆராயவில்லை. ஆனால் அந்த அற்புதத்தை ஏற்றுக் கொண்டனர். பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றும் விரும்புகின்றனர். என்ன செய்தார்கள் தெரியுமா?

மனிதனை கடவுளாக எண்ணி, அவனுக்கு மாலை, மரியாதை செலுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய ஆசைப்படுகின்றனர். (V13) சிந்தனைக்குத் தீனிபோடாமல், உணர்வுகளுக்கு அடிமையாகின்றனர். ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்வதோடு தங்கள் பங்கு முடிவடைகிறது என்று நினைக்கின்றனர். அதுவா ஆண்டவருடைய பார்வையில் மதிப்பானது? இங்கும் ஆவிக்குரிய சிந்தனையில்லாமல், சரீர கண்ணோட்டம் மேலோங்கி ஜனங்கள் தவறு செய்கின்றனர்.

அருமையான நண்பரே, மேலே பார்த்த சம்பவங்கள் முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் நடந்தவைதானே என்று நினைக்கிறீர்களா? ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் மனிதனின் மனநிலையில் பக்குவமோ அல்லது மாற்றமோ இன்றும் பெரிதாக ஏற்படவில்லை. சொல்லப்போனால் நிலைமை இன்னும் மோசமாக, அதேசமயம் வெகுவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. **மானிடத்தின் மாபெரும் தவறு** தொடர்கிறது.

தத்துவார்த்த ரீதியாக கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பி மானிடம் தோற்றுக் கொண்டிருக்கிறது. தத்துவங்களின் மீது அல்ல, பேருண்மைகளின் மீது தான் கிறிஸ்தவம் கட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதான கிறிஸ்தவத்தை ஆவிக்குரிய சிந்தனையுள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

மனித ஞானம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை. (I கொரி 1:25) ஆகவே ஆவிக்குரிய சிந்தனையை நாம் பெற்றுக் கொள்வோம். ஆண்டவரின் காரியங்களை அறிந்து, கீழ்ப்படிவோம். இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்று சமாதான ஜீவிகளாக மாறுவோம்.

ஆண்டவரின் அருட்பணியில்,

**E.Z.S. ராஜநாயகம்**

# திரு முழுக்கு என்ன செய்யாது ?

ஞானஸ்நானத்தைக் குறித்து வேதாகமம் போதிக்கிறது ஞானஸ்நானம் இரட்சிக்கிறது என்று சொல்கிறது. (2பேது 3:21) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு வான் (மாற் 16:16), ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்காக. (அப் 2:38). ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாகவும், சபைக்குள்ளாக வும் ஞானஸ்நானம் கொண்டு வருகிறது. (ரோம 6:34, 1 கொரி 12:13). மறுபிறப்புக்கு வழிசெய்கிறது (யோவா 3:3-5) வேதா கமத்தின்படி, வசனத்தைக் கேட்டு, தேவன் மீதும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மீதும் விசுவாசம் வைத்து, மனந்திரும்பி, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயி னால் அறிக்கையிடும் பொழுது, மேற்சொன்னஎல் லாவற்றையும் ஞானஸ்நானம் செய்கிறது. (ரோமர் 10:17, எபி 11:6 யோவா 3:16, லூக் 13:33, மத் 10:32.33). அதாவது கொடுக்கப்பட்டி ருக்கின்ற கட்டளைகளில் ஞானஸ்நானமும் ஒன்று. அது ஒருவனை. தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது இரட்சிப்புக்கு அழைத்து செல்கிறது.

ஞானஸ்நானமானது கட்டளையாகவும், இரட்சிப்புக்கு நிபந் தனையாகவும், இரட்சிப்புக்கு கட்டாயம் செய்ய வேண்டிய ஒரு செயலாகவும் இருக்குமானால், அது வேறொன்றையும் நமக்குச் சொல்கிறது. அதாவது, ஞானஸ்நானமானது, தேவனுடைய அறிவு ரைப்படி செய்யாதபொழுது அது ஒருவனை இரட்சிக்கவோ, கிறிஸ்துவை தரித்துக் கொள்ளவோ அவருடைய சபைக்குள் அங் கமாகவோ செய்யாது. ஆகவே, **ஞானஸ்நானம் என்ன செய் யாது** என்பதைக் குறித்து, வேத புத்தகத்தின் துணை கொண்டு ஆராய்ந்து பார்க்கலாம்.

ஞானஸ்நானம் மட்டும் ஒருவனை இரட்சிக்காது. ஒரே ஞானஸ்நானம் என்று பவுலடியார் சொல்கிறார். எபே 4:5), ஆனால் அந்த ஒரு ஞானஸ்நானமானது வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கின்ற பல நிபந்தனைகளை நிறைவேற்றி, பிறகு அதற்கு இசைவாக ஒருவன் செய்யும் பொழுதுதான், ''அதனால் நன்மை உண்டு. ஒரு குறிப்பிட்ட செயல் மட்டும் ஒருவனை இரட்சிப்ப தில்லை. ஆனால், சொல்லப்பட்டிருக்கின்ற அநேக காரியங்களுக்கு ஏற்றபடி ஒருவன் அடுத்தடுத்து செய்யும்போது, இறுதியில், அது அவனை இரட்சிப்புக்கு அழைத்துச் செல்கிறது.

**ஞானஸ்நானம் குழந்தைகளை இரட்சிக்காது.** குழந்தைகளுக்குத் தேவையானதாக ஞானஸ்நானம் ஒரு போதும்

சொல்லப்படவில்லை. ஒருவன் வசனத்தைக் கேட்டு, புரிந்து, விசுவாசிப்பது மிகவும் அவசியம். குழந்தைகள் இதைச் செய்ய முடியாது. (ரோமர் 10:17, மாற் 16:16). அப்படியானால் அவர்களின் நிலை என்ன? அவர்களிடத்தில் பாவமில்லை. அவர்கள் இழந்து போகப் போடவில்லை. குழந்தைகள் பாதுகாப்பான நிலையில் உள்ளார்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி நன்மை, தீமை அறியக்கூடிய பருவத்தை அடையும் பொழுது பாவிகளாகிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுக்கு இரட்சிப்பு அவசியமாகிறது. (ரோம 3:23, ரோம 6:23)

**ஞானஸ்நானம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளாத பட்சத்தில் வயதுவந்தவர்களையும் கூட இரட்சிக்காது.** அப்போஸ்தலருடைய நடபடிகளில் சொல்லப்பட்டிருக்கின்ற இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் முழுவதிலும், முதலாவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதென்றும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டவர்கள் அதைப் புரிந்து, விசுவாசித்துப் பிறகுதான் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமானார்கள் என்றும் பார்க்க முடியும்.

ஒருவேளை, சிலர் தங்களுடைய நண்பர்களின் செல்வாக்கினால் கவரப்பட்டு, தன்னுடைய நண்பனைப் போலவே, தானும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளலாம் என்று ஞானஸ்நானம் பெறுவார்களானால், அப்படிப்பட்டவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. வெறுமனே, தங்கள் நண்பர்கள் செய்ததை தாங்களும் செய்கிறார்கள் 'அவ்வளவே. இன்னும் அநேகர், ஞானஸ்நானம் தங்கள் இரட்சிப்புக்கு எதுவும் செய்ய முடியாது என நினைக்கின்றனர். நான் ஏற்கனவே, இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்றும் ஆனால் கிறிஸ்துவின் ஞானஸ்நான முன் மாதிரியைப் பின்பற்ற ஞானஸ்நானம் எடுக்கிறேன் என்றும் சொல்கின்றனர். அப்படிப்பட்டவர்கள், ஞானஸ்நானத்தைக் குறித்து தவறான கண்ணோட்டத்துடன் இருப்பதால், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றாலும், அது அவர்களை இரட்சிக்காது.

**தேவனை விசுவாசியாமலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட மனமற்றும் இருப்பானானால் ஞானஸ்நானம் ஒருவனை இரட்சிக்காது** ஞானஸ்நானத்தைக் குறித்து சரியான நோக்கமிருந்தும் கிறிஸ்துவை அறிக்கையிடாத பட்சத்தில் பிரயோஜனம் இல்லை. அப்பொழுது, ஞானஸ்நானம் அவனை இரட்சிக்காது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். (எபி

11:6) **இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப் படும்** என்று பவுலடியார் சொல்கிறார். (ரோம 10:10) எத்தியோப்பிய மந்திரி இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டான் என்று காண்கிறோம். (அப். 8:37)

**மனந்திரும்பாத பட்சத்தில் ஞானஸ்நானம் இரட்சிக்காது.** ''நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்'' என்று கிறிஸ்துவானவர் சொல்கிறார் (லூக் 13:3). மேலும் அத்தேனே பட்டணத்தாருக்கு பவுலடியார் சொல்லும் பொழுது, மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லோருக்கும் கட்டளையிடுகிறார்''. (அப் 17:30). பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் பெந்தெகோஸ்தே நாளில், எருசலேம் பட்டணத்தாருக்கு ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்கின்றனர். (அப் 2:38) இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் பார்த்தால், மனந்திரும்புதலும், ஞானஸ்நானமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என அறியலாம். ஞானஸ்நான கட்டளைக்கு ஒருவன் கீழ்படியும் பொழுது, தானாகவே பாவ மன்னிப்பையும் பெற்றுக் கொள்கிறான். மனந்திரும்ப ஒருவன் ஆசைப்படாமல், ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருந்தாலும் அதினால் பயனேதுமில்லை. பாவமன்னிப்பு ஒருபோதும் பெற்றுக் கொள்ள முடியாது. மனிதன் இரட்சிப்புக்குண்டான காரியங்களில் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று செய்து ஏமாற்றிவிடக்கூடாது என்றுதான் இரட்சிப்பின் வேலையை தானே முன்னின்று செய்கிறார்.

**கிறிஸ்துவானவரின் அதிகாரத்திற்கு உட்பட்டு செய்யாத பொழுது ஞானஸ்நானம் இரட்சிக்காது.**

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவானவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத் 28;18). ஆகவே, அவர் என்னவெல்லாம் சொல்கிறாரோ, அவைகளை **எல்லாம்** நாம் செய்ய வேண்டும். அவருடைய நாமத்தின் பேரில் தான் இரட்சிப்பு என்று சொல்லப்பட்டுள்ளது (அப் 4:12). ஆகவே அவருடைய அதிகாரத்தின் மூலம் மட்டுமே, நாம் ''பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே'' ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் (மத் 28: 19,20).

**ஞானஸ்நானம் ஆராதனைக்குரிய இடத்தையோ அல்லது கிறிஸ்தவ ஜீவியத்தையோ எடுத்துக் கொள்ளாது.**

ஒருவரின் விசுவாச உறுதிக்கு ஞானஸ்நானம் ஒரு மாற்று ஆகாது பாவம் செய்வதிலிருந்தோ, பாவம் செய்யக்கூடிய சோதனையிலிருந்தோ அது ஒருவனை விலக்கி வைக்காது. வசனத்தின் போதனைப் படி ஞானஸ்நானம் பெறும்பொழுது, அந்த ஞானஸ்நானம், ஒருவனை இரட்சிக்கும் கிறிஸ்துவையும், சபையையும் தரித்துக்கொள்ள உதவும். கிறிஸ்தவ வாழ்க்கை வாழ பிரயோஜனமாய் இருக்கும் எனில், அதே ஞானஸ்நானம் சில காரியங்களைச் செய்யாமலுமிருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் ஞானமான முடிவுகளை எடுப்பதற்கு, ஒருவன் ஞானஸ்நானம் என்ன செய்யும் என்றும் செய்யாது என்றும் தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம்.

ஒருவன் தேவனுக்கு கீழ்ப்படிவதும் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்படுவதும் திடீரென்று நடக்கக்கூடிய விபத்தைப் போன்ற காரியம் அல்ல. ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து புரிந்து அதற்கேற்றபடி செயல்பட்டு, அதன் மூலம் பயன் பெற வேண்டும். ஒருமுறை தேவசித்தத்தை அறிந்து அதன்படி நடந்தால் அவன் எந்த ஒரு பிரிவினைக் கூட்டத்திலோ, மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபையிலோ அங்கமாகமாட்டான். ஒருவன் உண்மையாகவே தேவனுக்குக் கீழ்படியும் பொழுது, கர்த்தர் அதை அறிந்து அவனை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக்கொள்வார். தான் இரட்சிக்கப்பட்டுவிட்டான் என்றும் கர்த்தருடைய சபையிலே தான் ஒரு அங்கம் என்பதையும் அறிந்து கொள்வான்.

நீங்கள் வசனத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? உங்கள் பதில் ''இல்லை'' என்பதானால், தொடர்ந்து தேவனுடைய வார்த்தைகளைப் படித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும் அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் இரட்சிப்பைப் பெற்று அவருடைய நாமத்தைத்தரித்துக் கொண்டிருக்கும், கர்த்தருடைய குடும்பமாகிய சபையிலே அங்கமாவீர்கள். உங்கள் கீழ்ப்படிதலுக்கு, நாங்கள் ஏதாவது ஒருவகையில் உதவமுடியுமானால் தயவுகூர்ந்து எங்களுக்குத் தெரிவியுங்கள். நாங்கள் எப்பொழுதும் உங்களுக்கு உதவ ஆயத்தமாகவே உள்ளோம்.

J.C. சோட்

## ஞானத்தைத் தேடு!

ஞானத்தைக் கண்டடைகிற மனிதனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனிதனும் பாக்கியவான்கள்.

ஞானவான்கள் கனத்தை சுதந்தரிப்பார்கள், மதிகேடரோ கனவீனத்தை அடைவார்கள்,

நீதிமொழிகள் 3:13,35

# பெண்கள் ஜெபம் செய்யலாமா?

பெண்களுக்கு தேவனோடு உள்ள உறவு பற்றி பல வித்யாசமான நம்பிக்கைகள், கருத்துக்கள் நிலவி வருகின்றன. சிலர் கூறுகிறார்கள் பெண்கள் தேவனுடைய சமுகத்தில் வந்து அவரை ஆராதிக்கவோ அல்லது ஜெபம் செய்யவோ கூடாது என்று. ஆனால் பெண்கள் ஆராதனையில் கூட முன்னின்று சில தலைமை பொறுப்புகளை ஏற்கலாம் என்று வேறு சிலர் கூறுகிறார்கள்.

இங்கு நம்முடைய கேள்வி யாதெனில், பெண்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஆராதனை, ஜெபம் இவைகளைப் பற்றி பரிசுத்த வேதாகமம் என்ன போதிக்கிறது? என்பதே.

முதலாவதாக நாம் பழைய ஏற்பாடு புதியஏற்பாடு இவற்றிற்கிடையேயுள்ள கட்டளைகளை வேறுபடுத்தி பார்த்தாக வேண்டும். மனிதன்இப்பூமியில் சஞ்சரிக்க ஆரம்பித்த அந்த காலத்திலே தேவபயமுள்ள குடும்ப தலைவர்களிடம் தேவன் நேரடியாகப் பேசினார். ஆதியாகமம் 6-9 அதிகாரங்களில் தேவன் நோவாவைப் பார்த்து அவனையும் அவன் குடும்பத்தையும் வெள்ளத்தினின்று காப்பாற்றிக் கொள்ள ஒரு பேழையை உண்டு பண்ணும்படி நேரடியாகக் கூறுகிறார். அடுத்த காலக்கட்டத்திலே விசுவாசிகளின் தகப்பன் என்றழைக்கப்படும் ஆபிரகாமிடத்தில், அவனுடைய தேசத்தையும், தன் வீடு, இனம் இவற்றைவிட்டுவிட்டு தான் காண்பிக்கப்போகும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட பூமிக்கு நம்பிக்கையோடே போகும்படி தேவன் அழைக்கிறார். (ஆதியாகமம் 11-25 அதிகாரங்கள்.)

பிற்பாடு ஆபிரகாமின் சந்ததியார் என்று அழைக்கப்படும் இஸ்ரவேல் வமசத்தார் திரும்ப, திரும்ப விக்கிரக வணக்கம் என்ற பாவத்திற்கு அடிமைகளான போது தேவன் அவர்களுடன் நேரடியாகப் பேசாமல் மோசேயின் மூலமாக எழுதப்பட்ட பிரமாணங்களைக் கொடுக்கிறார். இந்த பிரமாணத்தின்படி மக்கள் தங்களுடைய காணிக்கைகளையும், பலிகளையும் தேவனுக்கு செலுத்துவதற்கென்று'' ஆசாரிய முறையை தேவன் ஏற்படுத்துகிறார். இந்த ஆசாரியர் ''லேவி'' கோத்திரத்தில் இருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட வேலைகள், அதற்கான கட்டளைகள் இவையனைத்தையும் லேவியராகமம் 8,9 அதிகாரங்கள் மூலம் நாம் தெளிவாக காணலாம்

தேவன் மோசேக்கு கொடுத்த நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? (கலாத்தியர் 3:19) .... வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாக கூட்டப்பட்டு தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. அதாவது இயேசுகிறிஸ்து வருமளவும் (வசனம் 16) கட்டளையாகக் கொடுக்கப்பட்டது .... ஆகவே நியாயப்பிரமாணமானது நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது. .... நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே (கலாத்தியர் 3:24, 26).

எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு புதிய சட்டத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதுவே கிறிஸ்துவின் சட்டம். இந்த சட்டத்தின்படி பெண்களின் பங்கு என்ன? அவள் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியுமா? அவள் தேவனை ஆராதிக்கலாமா? அவள் ஜெபிக்கலாமா? ஆராதனை வேளையில் அவள் முன்னின்று மற்றவர்களை வழிநடத்த முடியுமா? ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் வேலைகள் தேவனால் அங்கீகாரம் பெற்றதாயிருக்குமா?

வேதாகமத்தின் பதிலைப் பார்ப்போம். (கலாத்தியர் 3:26-28) வசனப்பகுதிகள் நாம் எவ்வாறு அவருடைய பிள்ளைகளாக மாறினோம் என்றும்தேவன் ஏதோ ஒரு தேசத்துக்கு அல்லது பிரிவு கூட்டத்துக்குமட்டும் முக்கியத்துவம் கொடுத்துமற்றவர்களைஒதுக்கிவிடவில்லை என்பதையும் தெளிவாக விளக்குகிறது. ''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை. ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.''

கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ், தேவன் அனைத்து மனிதர்களின் ஆன்மாவையும் கணக்கில் வைக்கிறார். பழைய பிரமாணத்தின் கீழ் தேவைப்பட்டதுபோல் ஒரு குறிப்பிட்ட ஜனத்தையோ, அல்லது தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கோத்திரத்தையோ ஆண்களை குடும்பத்தின் முதன்மையாக கருதுவதையோ தேவன் விரும்பவில்லை. மாறாக இன்று தேவன் இரண்டுவகையான மக்களை மட்டும்தான் பார்க்கிறார். முதலாவது இயேசுகிறிஸ்து மூலமாக தன்னோடு ஐக்கியமானவர்கள், இரண்டாவது, இன்னும் அவருடைய பிள்ளைகளாக மாறாதவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களை

குறித்து பேசும்போது அவர்கள் தேசம், இனம், மொழி, சமுதாய அந்தஸ்து இவையெல்லாவற்றையும் கடந்து ஒன்றாகவே இருக்கிறார்கள் என்று தேவன் கூறுகிறார்.

இதன் பொருள் என்னவெனில் தேவனுடைய பார்வையில் பெண்களின் ஆன்மா ஆண்களின் ஆன்மாவைப் போலவே மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது. அவளுடையபாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்படும். அவளுடைய ஜெபம் கேட்கப்படவும், அதற்கான பதிலைப் பெறவும் அவள் அவருடைய வாக்குத்தத்தங்களை சார்ந்திருக்கவும் முடியும். I பேதுரு 3:7 வசனப்பகுதி இப்படியாக பேசுகிறது. ''அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிற படியினால் உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

பெண்கள் சபைகளில் ஊழியக்காரிகளாய் இருந்தார்கள் என்று பல வசனங்கள் மூலம் நாம் அறிகிறோம். ரோமர் 16:1 ''செங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாள்''.... வசனம் 3: ''கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும, ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்.'' வசனம் 6: ''எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்''. அப்போஸ்தலர் நடபடிகள் 16ம் அதிகாரத்தில் லீதியாள் என்னும் பெயர்கொண்ட ஒரு பெண்ணின் மனந்திரும்புதலைக் காண்கிறோம். அவள் உடனே அப்போஸ்தலன் பவுலையும், அவனோடிருந்தவர்களையும் தன்னுடைய வீட்டிலே வந்து தங்கும்படியாக ஆவலோடு அழைக்கிறாள் ''விருந்தோம்பல்'' என்ற நல்ல பண்பினால் லீதியாள் ஒரு சிறந்த கிறிஸ்தவளாக திகழ முடிந்தது.

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து இஸ்ரவேல் நாடெங்கும் சுற்றி திரிந்து தன் சீஷர்களை பயிற்றுவித்துக் கொண்டிருந்த நாட்களில் பெண்களும் அக் கூட்டத்தில் அவரோடு இருந்தனர். மத்தேயு 27:55 ''மேலும் இயேசுவுக்கு ஊழியஞ் செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோட வந்திருந்த அநேக ஸ்திரிகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்''. லூக்கா 8:3 ''ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே

இருந்தார்கள். இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்த போது அவர் முதன் முதலாக மகதலேன்னா என்று அழைக்கப்படும் ஒரு பெண்ணுக்குத்தான் காட்சி தந்தார். அவள் போய் தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

எனவே கிறிஸ்தவர்களில் ஆண், பெண் இருபாலரும் தேவனுடைய பார்வையில் சமமாக மதிக்கப்படுகின்றனர். இருபாலரும் அவருடைய இராஜ்ஜியத்தின் பணியில் ஈடுபடவும், ஜெபிக்கவும் தகுதியுடையவர்களே. எனினும் புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியில் பெண்களுக்கென்று தடைகள் சில விதிக்கப்பட்டுள்ளன. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, ''ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்குநான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப் பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். அப்படியிருந்தும் தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால் பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்''. இந்த வசனப் பகுதிகள் பெண்கள் ஆராதனையில் தலைமைப் பொறுப்பு வகிக்கக்கூடாது என்று மட்டும் கூறி நின்றுவிடாமல், ஏன் அவ்வாறு பொறுப்பு வகிக்ககூடாது என்ற வினாவிற்கும் விளக்கம் தருகிறது. ''ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத்தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். 1 கொரிந்தியர் 11:3.

ஆகையால் பெண் ஆணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டபடியினாலும், தேவனுக்கு முன்பாக கீழ்ப்படியாமை என்ற பாவத்தைச் செய்ய ஏவாளே ஆதாமை இழுத்துச் சென்றதாலும் தேவன் ஆண்களை குடும்பத்திற்குத் தலைவனாகவும், தன் மனைவியையும், தம் பிள்ளைகளையும் வழிநடத்திச் செல்லவும் ஏற்படுத்தினார். ஆராதனைகளில் ஆண்கள் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்துவது தேவனால் கட்டளையிடப்பட்ட ஒன்று. பெண்கள் இதை மதித்தாகவேண்டும்.

ஆராதனை நேரத்தை தவிர மற்ற நேரங்களில் செய்வதற்கென்று பெண்களுக்கு சில போதனைகள் வேதாகமத்தில் கொடுக்

கப்பட்டுள்ளன. ''முதிர் வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும் தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷனிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும், அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும். வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப் படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற் காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லு'' (தீத்து 2:3-5.

குடும்ப அமைப்பில் தேவனுடைய திட்டத்தை புரிந்து ஏற்றுக்கொள்வோமானால் அந்த அமைப்பின்படி பெண்ணின்மேல் ஆணுக்கிருக்கும் தலைமைத்துவம் என்பது, பெண்கள் ஆண்களை விட குறைவானவர்களோ அல்லது அவர்களுடைய ஆத்துமா தேவனுடைய பார்வையில் சமமானதல்லவென்றோ பொருள்படாது. ஆகையால் கிறிஸ்தவர்கள் தாங்கள் தேவனோடு வைத்திருக்கும் உறவு சம்பந்தமாக வேதாகமத்தில் கூறப்படும் எந்த வசனப் பகுதியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானதாகவே உள்ளது.

பெண்கள் தங்கள் உள்ளத்தை ஊற்றி தேவனிடத்தில் ஜெபிக்க முடியுமா? ஆம் வேதாகமம் இவ்வாறு போதிக்கிறது. ''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'' I தெசலோனிக்கேயர் 5:17 ''ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாகக் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் எபிரேயர் 4:16''. என்று நாம் உற்சாகப்படுத்தப்பட்டிருக்கிறோம். ''எந்த சமயத்திலும் ஜெபம் பண்ண வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறோம்'' எபேசியர் 6:18 பேதுரு அப்போஸ்தலன் கூறும் போது ''ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருந்து விழித்திருங்கள்'' என்கிறார். I பேதுரு 4:7.

நம்மைப்பற்றிய தேவனின் எண்ணங்கள் திருமறையில் எழுதப்பட்டுள்ளன. நாம் அவரிடத்தில் ஏறெடுக்கும் நமது எண்ணங்கள்தான் ஜெபமாகும். இந்த வகையான தொடர்பு இருக்கும் வரையில் கிறிஸ்தவ பெண்கள் தேவனோடு இருக்கும் உறவில் பாதுகாப்போடு விசுவாசமுள்ள பிள்ளைகளாக இருக்க முடியும்.

பெட்டிபர்ட்டன் சேரட் ரேச்சல் ராஜநாயகம்.

# மகிழ்ச்சியின் இரகசியம்

## (SECRET OF HAPPINESS)

மனிதன் மகிழ்ச்சியாக வாழவிரும்புகிறான் ஆனால் உண்மையான மகிழ்ச்சியை அவன் அடைவதில்லை. நிறைய பணம் இருந்தால் நாம் மகிழ்ச்சியாக வாழமுடியும் என எண்ணுவோர் பலர் உண்டு. ஆனால் உண்மையான, நிலையான, நீடித்த மகிழ்ச்சியை பணம் அளிப்பதில்லை என்பதை அவர்கள் உணருவதில்லை. வீடுகள், புதுபுது ஆடைகள், நவீன மின் கருவிகள், இன்னும் அவன் ஏங்கிக் கொண்டிருக்கும் எத்தனையோ உலகப் பொருட்களை மனிதனுக்குப் பணம் பெற்றுத்தரக்கூடும். என்றாலும் அவை எதிலும் உண்மையான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் மனிதன் அடைந்து விட முடியாது.

பணத்தையும் சொத்துக்களையும் குவித்து வைத்துக் கொண்டிருக்கும் மனிதன், அதே சமயத்தில் கவலைகளையும் மற்றொரு புறம் குவித்துக் கொண்டிருக்கிறான், ஏனெனில், தேவைக்கு அதிகமான சொத்துக்களை சேர்க்கும் மனிதனுக்கு பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. அதன் விளைவாக, கவலைகளும் தொந்தரவுகளும் துன்பங்களும் அதிகரிக்கின்றன என்பதே உண்மை நிலை.

இன்னும் சிலர், போதைப் பொருட்கள், மது, மாது மூலமாக இன்பம் காண முயற்சிக்கின்றனர். ஆனால் அதுவும் சாத்தியமல்ல. இத்தகைய இன்பமானது (அவ்வாறு அதை அழைப்போமானால்) அற்ப ஆயுளில் அழிந்து போகக் கூடியதாயிருக்கிறது. அந்த நேரத்திற்கு அல்லது தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட சிறு காலத்திற்கு மட்டுமே போதைப் பொருட்களும், மது மாது போன்றவைகளும் இன்பமளிக்கக் கூடும். ஆனால் அவற்றின் பின் விளைவுகளோ பயங்கரமானவைகளாக இருக்கும். உண்மையைச் சொன்னால், மனிதனுக்கு உண்மையும் நீடித்த மகிழ்ச்சியும் அளிக்கவல்ல எதுவும் இவ்வுலகில் இல்லை. ஆம், மனிதன் இவ்வுலகில் நிறைய சொத்துக்களைச் சேர்த்து வைத்து தன்னை பெரிய பணக்காரன் என்று பெருமையாகக் கூறிக் கொள்ள முடியும்; நிறைய கல்வி கற்று பெரிய அறிஞன் என்ற பாராட்டை பலரிடமிருந்து பெறமுடியும்; பேரும், புகழும், மதிப்பும், மரியாதையும் அவனுக்குக் கிடைக்கக்கூடும். என்றாலும் இவ்வுலகில் அவன் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் காலம் வரையிலும் தான்

இவை எல்லாவற்றிற்கும் அவன் சொந்தக்காரனாக இருக்கிறான். மரணம் பாரபட்சமற்றது. சிறுவர், பெரியவர், ஏழை பணக்காரன் ஆக எல்லோருமே மரித்துப் போக வேண்டியவர்களே. மரணம் ஏற்பட்டதும் மனிதனுடைய ஆத்துமா உடலை விட்டுப் பிரிந்து போவதும், இவ்வுலகில் அவன் சொந்தங் கொண்டாடி வந்த எல்லா பொருட்களையும் நிரந்தரமாக அவன் இழந்து போகிறான்.

இயேசு ஒரு உவமையைக் கூறினார், ''ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன் : நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைத்து பின்பு : ஆத்துமாவே, உனக்காக அநேக வருடங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி, மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்'' (லூக்கா 12:16-20)

இவை எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! நிறைய பணத்தையும் சொத்துக்களையும் இவ்வுலகில் சேர்த்து வைத்து பணக்காரனாக வாழலாம்; பணத்தால் சிறந்த கல்வியையும் பட்டங்களையும் பெறலாம்; அரசியல் உலகில் புகுந்து பெரிய தலைவராகக்கூடும்; ஆனால் நமது ஆத்துமா தேவனால் அழைக்கப்படும் வேளையில், அதாவது சரீரத்தை விட்டு ஆத்துமா பிரிந்துபோகிற வேளையில் மேற்சொன்ன உலகச் சொத்துக்களால் நமக்கு என்ன பயன்? மரணத்திற்குப் பின் நமது நித்திய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும்? இவ்வுலகில் நாம் சேகரித்து வைத்த பணமும், புகழும் அந்த ஆவிக்குரிய உலகத்திலும் நமக்குப் பயன்படுமா?

இவ்வுலகம் முழுவதையும் ஒருவன் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தனது ஆத்துமாவை இழந்து போனால் அவனுக்கு என்ன பயன் என இயேசு ஒரு தடவை கூறவில்லையா?

உண்மையான நித்திய மகிழ்ச்சியை மனிதனுக்கு அளிக்க இவ்வுலகில் எதுவுமே இல்லை. ஒருவனுடைய ஆத்துமா தேவனால் அழைக்கப்படும்போது, நித்திய ஜீவனை தான் அடையப்போவதை

அறிந்து, தேவனுடைய பரலோகத்தில் பிரவேசிக்கும் நிச்சயமான நிலையில் அவன் இருப்பது மட்டுமே ஒருவனுடைய உண்மையான மகிழ்ச்சியின் இரகசியமாகும். இந்த நிச்சயமான நிலையை ஒரு மனிதன் எப்போது அடைகிறான்? அவனது பாவங்களையெல்லாம் தேவன் மன்னித்து, தேவனோடு அவன் ஒப்புரவாகி, தேவனுடைய கட்டளைகளின்படியே அவன் நடக்கும்போது மட்டுமே அந்நிலையை அடைகிறான். இதை அவன் புரிந்து கொள்ளுவது எவ்வாறு?

தேவன் ஒருவரால் மட்டுமே இதைப்பற்றி நமக்குக் கூற முடியும். தேவன் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார்; பாவத்தில் மூழ்கி எவனும் நரகத்தில் வீழ்ந்து போவதை அவர் விரும்பவில்லை என்பதாக தேவனுடைய புத்தகமாகிய சுவிசேஷம் நமக்கு அறிவிக்கிறது. சகல மனிதர்களும் பாவங்களிலிருந்து விடுபட்டு, அவரோடு பரலோகத்தில் வாழ வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மரித்தார் என வேதாகமம் கூறுகிறது தேவனுடைய விருப்பத்தின் படியே கிறிஸ்து சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார் எனவும் வேதாகமத்தில் காண்கிறோம். அவருடைய தியாக மரணத்தின் மூலமாக உலகின் ஒவ்வொரு மனிதனுடைய கடனையும் அவர் தீர்த்து வைத்தார். அவருடைய கருணையின் காரணமாக, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தனது மரணத்தின் மூலமாக நமது தண்டனையை அவரே ஏற்றுக் கொண்ட படியால், தேவனுக்கு முன்பாக நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். உலகத்தின் பாவங்களுக்காக அவர் மரித்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உனக்காகவும், எனக்காகவும் எல்லோருக்காகவும் அவர் மரித்தார். இதுவே **நற்செய்தி.**

மனிதனின் பாவங்களுக்காக கிறிஸ்து பலியானார் என வேதாகமம் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவை தன் முழு இருதயத்தோடு மனிதன் விசுவாசித்தால் தனது பாவங்களை விட்டு மனந் திரும்பி தனது பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு முழுக்கு ஞானஸ்நானம் பெற்றால், கிறிஸ்து வழியாக, தேவனின் விருப்பப் படியாக அவன் வாழ்ந்தால், கிறிஸ்துவின் மரணத்தின் நிமித்த மாகவும், அவருள் அவன் வசிப்பதாலும், தேவனுக்கு முன்பாக அவன் நீதிமானாக நிற்கிறான். இது எவ்வளவு அருமையான ஒரு காரியம்!

மனிதனுடைய எல்லா பாவங்களையும் தேவன் மன்னித்து விடுகிறார் என்பதும், மரணத்திற்குப்பின் இவ்வுலகை விட்டுச் செல்லும் மனிதன் தேவனுடைய பரலோகத்தில் அவரோடு நித்திய

வாழ்க்கை வாழப் போகிறான் என்பதுமே மனிதன் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையான, நீடித்த மகிழ்ச்சியாகும்.

நீ எவ்வளவு பணத்தையும் சொத்தையும் இங்கு சேர்த்து வைத்திருக்கிறாய் என்பதோ எவ்வளவு படித்திருக்கிறாய் என்பதோ அல்லது எவ்வளவு அதிகாரம் படைத்தவனாக இவ்வுலகில் வாழ்கிறாய் என்பதோ முக்கியமல்ல, ஏனெனில், ''உலகிலுள்ள யாவும் மாம்ச இச்சையும், வாழ்வின் பெருமையும்-பிதாவினால் உண்டானவைகள் அல்ல; அவைகள் உலகத்தினால் உண்டானவை. உலகமும் அதன் இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றும் நிலைத்திருப்பான்'' என்று வேதாகமம் கூறுகிறது (1 யோவான் 2:16,17).

தேவனுடைய கட்டளைகளை நீங்கள் கடைபிடிக்க விரும்புகிறீர்களா?

தமிழில் : எஸ்.எஸ். ராஜன் சன்னிடேவிட்

## உங்கள் பொக்கிஷம் எங்கே?

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

மத்தேயு 6:29-21

# சிலுவை வார்த்தை

*சிலுவைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. (I கொரி 1:18)*

சிலுவை வசனமாகிய கிறிஸ்துவின் சுவிசேஷம், மிகவும் வல்லமை நிறைந்த செய்தியாகவும், தேவபெலன் நிறைந்த செய்தி-யாகவும் இருக்கிறது. (ரோம 1:16). சுவிசேஷத்தின் ஒட்டுமொத்த செய்திக்கு வழியை ஆயத்தம் பண்ண இயேசுவும், அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட சீடர்களும் மூன்று வருடங்கள் சுற்றித் திரிந்து பாடுபட்டார்கள். அதற்கு முன்பே, யோவான் ஸ்நானகன் வரப்போகிற மேசியாவுக்காக, சுற்றித் திரிந்து இஸ்ரவேல் மக்களை ஆயத்தம் செய்தார். மேசியாவாகிய, கிறிஸ்துவின் உபதேசங்களை சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் பெரும்பாலும் நிராகரித்தார்கள். (யோவா 1:11). அவர்கள் அவரைக் காட்டிக் கொடுப்பவர்-களாகவும், கொலைக்கு ஒப்புக் கொடுப்பவர்களாகவும் ஆனார்கள்.

கிறிஸ்துவின் விரோதிகளும், எதிரிகளும், கல்வாரியோடு கிறிஸ்துவையும், அவருடைய உபதேசங்களையும் அமைதியாகும்-படி செய்துவிட்டோம் என நினைத்தனர். ஆகவே தான், அந்த வழியாய் நடந்து போகிறவர்கள், தங்கள் தலைகளைத் துலுக்கி, ஆ!ஆ! தேவலாயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டு-கிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்து இறங்கி வா என நிந்தித்தனர். (மாற் 15:29, 30). உண்மை-யாகவே அவரை சத்தம் இல்லாமல் செய்துவிட்டோம் என நினைத்தனர். அவர்கள் நினைத்தது எவ்வளவு தவறு! அவரை ஒரு ஏமாற்றுக்காரனாக நினைத்ததே காரணம். இஸ்ரவேலர் ஒரு ''வெற்றியுள்ள தலைவனை'' எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். உலகமானது சிலுவை வார்த்தைக்காக, ஆயத்தமான நிலையிலும், சரியான தருணத்திலும் இருந்தது. (கலா 4:4, 5). வெற்றித் தலைவனுக்குப் பதிலாக, யூதர்களுக்கும் எஞ்சிய உலகத்தாருக்கும் ஒரு இரட்சகர் தேவைப்பட்டார். கல்வாரியில் சிலுவை வார்த்தை அமைதியாக்கப்பட்டது. ஆனால் அது தற்காலிகமாகத்தான்.

கல்வாரியிலிருந்து, எண்ணி ஐம்பது நாட்களுக்குப் பிறகு, பெந்தெகோஸ்தே நாளில், சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவி (யோவா 16:13) ''பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல'' வானத்திலிருந்து இறங்கி வந்து, சிலுவையின் வல்லமையான

வார்த்தையைக் கொண்டு வந்தது (அப் 1:8: 2:1-4) கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட பேதுரு (மத் 16;18,19), நற்செய்தியைப் பிரசங்கித்து, மூவாயிரம் ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வந்து சிலுவையின் வார்த்தையை வெளிப்படுத்தினார். (அப் 2:14 44). அப்பொழுது நற்செய்தியைப் பிரசங்கித்தவர்களைப் பய முறுத்தி, சிறையிலடைத்து, நற்செய்தியை அடக்கிப்போட முயற்சி செய்தனர். (அப் 4:1-12). ஆனால் சிறைச்சாலையானது சிலுவை வார்த்தையைத் தாங்க முடியாமல் திணறியது. இந்த சமயத்தில், சிலுவை வார்த்தைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்த ஆண்களின் எண்ணிக்கை மாத்திரம் ஐயாயிரத்தை தொட்டுவிட்டது. (அப் 4:4). நற்செய்தி எருசலேமெங்கும் பரவின பொழுது, திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடம் அதிகதிகமாகச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 5:14).

மீண்டும் அப்போஸ்தலர்கள் சிறையிலடைக்கப்பட்ட போதும் சிலுவை வார்த்தையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மிகக் குறுகிய காலத்தில் தேவனுடைய வார்த்தையானது அபரிமிதமாய் பெருகுகிறது. ''சீடர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று'' (அப் 6:7). தேவனுடைய வார்த்தையானது இப் பொழுது நகரத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. எருசலே மைச் சுற்றியிருந்த கல் மதில்கள், நற்செய்தியைத் தாங்கக் கூடாமல் சரிந்தது. (அப் 1:8).

சிலுவை வார்த்தையை அடக்க முடியாததைக் கண்ட யூதர் கள், சபைக்குஎதிராக மிகப்பெரிய துன்புறுத்தலை ஏவிவிட்டு, கிறிஸ் துவைப் பின் பற்றினவர்கள் சிதறிப்போகும் படியாகச் செய்தார்கள் (அப் 8:1). யூதர்கள் இந்த அடக்குமுறையின் மூலம், நற்செய்தியை அடக்கிப் போடலாம் என நினைத்தனர். எவ்வளவு முட்டாள்தன மானது! சிலுவையின் வார்த்தை காட்டுத் தீ போல் வேகமாகப் பரவுவதற்கு தாங்கள் உதவி செய்கிறோம் என்று உணராதிருந் தார்கள் (அப் 8:4) இப்பொழுது, செய்தியானது அவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சமாரியர்களுக்கும் சென்றடைந்தது.

அடக்குமுறை, துன்புறுத்தல் இவைகளுக்குப் பிறகு எருசலே மில் மீந்திருந்த அப்போஸ்தலர்கள், காரியங்கள் எப்படி போய்க் கொண்டிருக்கின்றன என்று அறிய விரும்பினர். பேதுருவையும், யோவானையும் விவரம் சேகரிக்க சமாரியாவுக்கு அனுப்பினர். இந்த இருவரும் காரியங்கள் உண்மைதானென்று அறிந்து சமாரி-யாவிலிருந்த பொழுது அநேக கிராமங்களுக்குச் சென்று நற் செய்தியை பிரசங்கித்தனர் (அப் 8:25). இப்பொழுது நற்செய்தி

யூதேயா, சமாரியா எங்கிலும் பரவிற்று. இந்த பிராந்தியங்களின் எல்லைகளெல்லாம் சிலுவை வார்த்தையின்வல்லமையைத் தாங்க முடியாமல், கடந்து போகும்படி தானாக வழிவிட்டன. ''பூமியின் கடைசி பரியந்தமும்'' சிலுவை வார்த்தை செல்லக் கூடிய தருணம் வந்துவிட்டது (அப் 1:8).

மறுபடியும் பேதுரு நற்செய்தியை அறிவிக்கக் கூடிய சிலாக்கியத்தைப் பெறுகிறார். ஆனால் இப்பொழுது புறவினத்தாருக்கு. அந்தக் கால கட்டத்தில் இது நினைத்துப் பார்க்க முடியாதது. நற்செய்தி மாந்தர் யாவருக்கும் பொதுவானது என்று, பேதுருவுக்கு தேவன் மூன்று முறை வெளிப்படுத்தினார். (அப் 10:1-16). கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு புறவினத்தாருக்கும் தான் என்பதை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கொர்நெலியுவுக்கும், அவன் வீட்டாருக்கும் நற்செய்தியை அறிவித்து எருசலேம் திரும்பினபோது, யூதர்கள், பேதுருவிடம் வாக்கு வாதம் செய்தனர். பிறகு, நம்மால் ஒதுக்கப்படும் புறவினத்தார் எப்படி சிலுவை வார்த்தையாகிய நற்செய்தியைக் கேட்டு ஏற்றுக் கொண்டார்கள் என்பதை பேதுரு, வருணித்தபோது அதைக் கேட்டு தேவனை மகிமைப்படுத்தினர்.

ஒரு காலத்தில் சபையைத் துன்பப்படுத்தி, கிறிஸ்தவர்களை சிறையிட்டு, அவர்களை கொலை செய்வதற்கும் அஞ்சாமல் ஒப்புக் கொடுத்த அப்போஸ்தலனாகிய பவுல், சிலுவை வார்த்தையை உலகின் கடைசி பாகத்திற்கும் கொண்டு செல்லும்படியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். அவருடைய பெரும் முயற்சியால் நற்செய்தி உலகெங்கும் பிரசங்கிக்கப்பட்டது. அநேக ஆத்துமாக்கள் கர்த்தரிடமாய் திருப்பப்பட்டார்கள். ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. பவுலின் வாழ்நாட் காலத்தில் சுவிசேஷம் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு சென்றடைந்தது (கொலோ 1:16, 23). சிலுவை வார்த்தை எங்கெல்லாம் சென்றதோ அங்கெல்லாம் விசுவாசமில்லாத யூதர்களால் எதிர்ப்பும் இருக்கவே செய்தது. நற்செய்தியை அறிந்தவர்களை, இந்த வணங்காக் கழுத்துள்ள சந்ததியினர், கொலை செய்து, வெற்றியும் கூடப்பெற்றார்கள். ஆனால் சிலுவையின் வார்த்தையை அவர்கள் ஒன்றும் செய்துவிட முடியவில்லை என்பது சரித்திரம் காட்டும் உண்மை.

நண்பர்களே, அடுத்த தலைமுறை தோன்றி, சிலுவை வார்த்தையை கேட்டு பயனடையுமுன், நமது காலத்தில் அது அமைதி

யாகி விடுமா? நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? தங்கள் திறமை, தந்திரம், அறிவு, ஆத்திரம் இப்படி அனைத்தையும் சேர்த்து முழுமூச்சாக முயன்று யூதர்களால் முடியாமல் போனதை நமது அக்கறையின்மையினால், அவபக்தியினால் நிறைவேற்ற உள்ளோமா? முதல் நூற்றாண்டில் சத்தியம் பிரசங்கிக்கப்பட்ட வேகமும், வசனத்தின் மீது தாகமும், அழியும் ஆத்துமாக்களின் மீது பாரமும், கர்த்தருடைய காரியத்தில் வைராக்கியமும் இல்லையெனில் இது நடக்கக் கூடியதே. கெட்டுப் போகிறவர்களுக்கு சிலுவை வார்த்தை வைத்தியமாகத் தோன்றினாலும், இழந்து போன ஆத்துமாக்களை மீட்பதற்கு இது ஒன்றுதான் இன்றும் தேவ பெலனாக உள்ளது. இந்த மாபெரும் வாய்ப்பு மனுக்குலத்துக்கு கடந்த 2000 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. சத்தியம் அறிந்த நீங்களும், நானும் மௌனவிரதம் காப்போமானால், யார் இதைச் செய்ய முன்வருவார்கள் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற் 16:15) என அர்த்தமுள்ள சிலுவை வார்த்தை ஆணையிட்டுச் சொல்கிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் இப்பணியைச் செய்தார்கள். நாமும் அவ்வண்ணமே செய்ய தீர்மானித்து. செயல்படுவோம். ஆத்தும ஆதாயம் செய்வோம். ஆசீர்வாதம் பெறுவோம்.

**ஜேம்ஸ் ரிக்காடு** | **E.Z.S. ராஜநாயகம்**

## யார் பெரியவன்?

உங்களில் எவனாகினும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக் கடவன்.

உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லோருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன்.

அப்படியே மனித குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அனேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

# EZS- ஒரு சிறந்த தந்தை

மிகச் சிறந்த தகப்பன் ஒருவரைக் குறித்து, உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிற பெரும்பாலோருடைய குடும்ப வாழ்க்கை, அவ்வளவு வெற்றிகரமாக இருந்ததில்லை. ஆனால், எங்களுடைய தந்தை, எப்படிச் சிறந்த ஊழியனாக, சிறந்த எழுத்தாளனாக விளங்கினாரோ அதே அளவிற்கு ஒரு சிறந்த குடும்பத் தலைவனாகவும் விளங்கினார் என்பதை அவருடைய மக்களாகிய நாங்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

அவருடைய குழந்தைப் பருவம், மற்றும் மாணவர் பருவம் இவற்றைத் தவிர்த்த வாழ்க்கையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து விடலாம். தனது 19-வது துவங்கி, அடுத்த 10 ஆண்டுகளை தாய் நாட்டின் சேவைக்கு அர்ப்பணித்தார். அடுத்த 10 ஆண்டுகளில் சமுதாய முன்னேற்றத்திற்கு பாடுபட்டார். கடைசி 24 ஆண்டுகளை தன்னை சர்வ வல்லவருக்கு ஒப்புக் கொடுத்து கிறிஸ்துவின் சபைக்காகவும், மெய்க் கிறிஸ்தவம் தழைக்கவும் பாடுபட்டார். மொத்தத்தில் தன் வாழ்நாளை தனக்காக வாழாமல் தேச சேவை, சமுதாய சேவை, கிறிஸ்துவின் சேவை என இவைகளுக்காகச் செலவிட்ட தன்னலமற்ற மனிதர். சேவையே தனது வாழ்க்கையாக இருந்த போதிலும், தனது, தகப்பனுக்குரிய கடமையிலிருந்து தவறியதேயில்லை. அவரைப் பற்றி ஏராளம் உண்டு. ஆனால் நினைவில் வந்தவற்றை எழுதுகிறேன்.

**ஜெபவீரர்:** தான் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்து, இவ்வுலக வாழ்க்கையில் தன் பிள்ளைகளுக்கு ஆதரவாக இருக்க முடியாது என்பதை உணர்ந்ததாலோ என்னவோ, இம்மையிலும், மறுமையிலும் பூரண வாழ்வு வாழ போதிய பயிற்சியை ஜெபத்தின் மூலம் கொடுத்தார். அவருடைய முழங்கால்கள் இரண்டும் மறத்துப்போய் விட்டதென்றால் அவருடைய ஜெப வாழ்க்கையை நீங்கள் அறிந்து கொள்ளலாம். பிள்ளைகளாகிய எங்களுக்கு நினைவு தெரிந்ததிலிருந்து, நாங்கள் காலையிலும், மாலையிலும் குடும்ப ஜெபம் செய்யத் தவறியதேயில்லை என்று சொன்னாலும் மிகை ஆகாது. தன்னுடைய உள்ளத்தின் கிடக்கைகளை அநேக சமயங்களில் ஜெபத்தின் மூலம் தான் எங்களுக்கு வெளிப்படுத்துவார். சுருங்கச் சொன்னால் ஜெபம் அவர் மூச்சு,

**கரிசனையுள்ளவர்:** சேவையும், ஆண்டவரின் வேலையும் அவருடைய பெரும்பான்மையான சிந்தனையையும், நேரத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டாலும், பிள்ளைகளாகிய எங்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தவறியதேயில்லை. மிகுந்த பொருளாதார நெருக்கடியில் அநேக நாட்களைக் கழித்தார். ஆனால் பிள்ளைகளாகிய நாங்கள் சோர்ந்து போய் விடக் கூடாது என்று, முயன்று எப்படியாவது எங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவார். குறிப்பாக தேவ பயத்தை மட்டு மல்ல சிறந்த கல்வியையும் எங்களுக்குக் கொடுத்தார்.

**ஆவிக்குரிய ஜீவியத்தில் அதிக கரிசனை**

எங்களின் ஆவிக்குரிய ஜீவியத்தில் தான் அதிக அக்கறை காட்டினார். எங்களுக்கு பூமிக்குரிய எந்த சொத்து, சுகங்களையும் அவர் வைத்துச் செல்லவில்லை. ஆனால் ஆவிக்குரிய ஜீவியத்தில் எங்களை, செல்வந்தர்களாக்கிச் சென்றுள்ளார். "தேவனுடைய வேலையை நான் உத்தமமாய்ச் செய்தால், என்னுடைய குடும்ப வாழ்க்கையை தேவன் பார்த்துக் கொள்வார் என்பதே அவருடைய தாரக மந்திரமாயிருந்தது". "ஆண்டவர் பார்த்துக்கொள்வார்" என்று, சில ஆயிரம் முறையாவது தனது வாழ்க்கையில் சொல்லி யிருப்பார். இந்த அளவுகடந்த நம்பிக்கைக்கு தேவன் ஒருபோதும் குந்தகம் ஏற்படாமல் உதவி செய்தார். "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" என்ற வசனத்திற்கேற்ப, எங்கள் பரம தகப்பன், பிள்ளைகளாகிய எங்களுடைய பூமிக்குரிய வாழ்க்கையையும் ஆசிர்வதித்துள்ளார்.

**முன் மாதிரியான ஜீவியம்:** சரீர வாழ்க்கையிலும், ஆவிக் குரிய வாழ்க்கையிலும் அநேகருக்கு குறிப்பாக பிள்ளைகளாகிய எங்களுக்கு முன்மாதிரியாக ஜீவித்தார். எடுத்த காரியத்தில் பிடிப்பும், அர்ப்பணிப்பு உணர்வும் இருந்தது. எந்தக் காரியத்தையும் தொலைநோக்கோடு தான் அணுகுவார். அவருடைய செயல் பாட்டின் வேகத்திற்கும், தொலைநோக்கு சிந்தனைகளுக்கும் நாங்கள் ஈடு கொடுக்க முடியாமல் போன சந்தர்ப்பங்கள் உண்டு. அப்பொழுதெல்லாம், அவருடைய எண்ணங்களை எங்கள் மீது திணிக்காமல், நாங்களே, புரிந்து பின்பற்றும்படியாகச் செய்தார். அந்த முன்மாதிரியை நாங்கள் என்றும் மறக்க முடியாது.

**கண்டிப்பானவர் ;** கிறிஸ்துவின் மேல் உள்ள வைராக்கியம் எப்படி இவருக்கு பெயரை வாங்கிக் கொடுத்ததோ, அதைப் போலவே கண்டிப்புக்கும் பெயர் போனவர். தவறுகளையும் குறைகளையும் கண்டிக்கிற அதே நேரத்தில் எங்களுக்கு சுதந்திரத்தையும், உரிமையையும் மறுக்கவில்லை. அவருடைய கண்டிப்பு எங்களுக்கு சில சமயங்களில் எட்டிக்காயாக இருந்தாலும், இப்பொழுது அவை தேனிலும் மதுரமாக உள்ளது, இன்னும் கொஞ்சம் அவர் எங்களை கண்டித்திருக்கலாமே என எண்ணுகிறோம்.

**இலட்சிய வீரர் :** இந்தப் பூமிக்குரிய வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை கணித்து, அதற்கேற்ற இலட்சியங்களோடு வாழ்ந்தார் லட்சங்கள் (பணம்) அல்ல, இலட்சியமே முக்கியம் என்பதை அடிக்கடி சொல்வார். ''எல்லாருக்குமா புகழ், இலட்சியவாதிகளுக்குத்தான் புகழ்'' என்று, மரணத்திற்கு முந்தின நாள் கூட சொன்னார். என அவருடைய நீண்ட கால ஊழிய நண்பர் ஒருவர் நினைவு கூர்ந்தார். **''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்ந்த''** இலட்சிய வீரர். சரீர பெலவீனம் மிக அதிகமாக இருந்து, மருத்துவர்கள் ஓய்வு அவசியம் என்று ஆலோசனை சொன்ன போதிலும், இலட்சியத்துக்காக ஓய்வின்றி மரணம் வரை, இறுதி மூச்சுவரை பாடுபட்டார். அவருடைய இலட்சியங்கள் நிச்சயம் எங்களுக்கு உதவும்.

அவருடைய கடுமையான கண்டிப்பு, சிலசமயங்களில் அவரை ஒரு கோபக்காரராகக் கூட காட்டியது. உடன் ஊழியர்கள் சபையார் குடும்பத்தார் இப்படி அநேகர் அன்று அதை விரும்பவில்லை. இன்றைக்கு வாய்விட்டுச் சொல்லி, தவறாக புரிந்து கொண்டேனே என அங்கலாய்க்கிறார்கள்.

இவ்வளவு அருங்குணங்களைப் பெற்று எங்கள் தகப்பனார் இருந்தார் என்று சொல்லும் பொழுது, அவருக்குப் பக்கபலமாக இருந்த எங்கள் **தாயை** நாங்கள் மறந்துவிட முடியாது. அவருக்கு உற்ற துணையாக இருந்து, ஆண்டவரின் அரும்பணிக்காகப் பாடுபட்டார்கள். உலகத்தில் உள்ள மிகச்சிறந்த தாயாக எங்கள் தாயை நாங்கள் மதிக்கிறோம்.

பிள்ளைகளாகிய எங்களுக்காகவும் தாயாருக்காகவும் ஜெபியுங்கள்

மகன்
**E.Z.S. ஏசையன்**

# வேதாகமம் மட்டும் போதுமா ?

# IS THE BIBLE ENOUGH ?

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பல காரியங்களை நாம் அவசியம் படிக்க வேண்டும். ஆனால் நமது வாழ்வு பற்றி கர்த்தருடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ள வேறு சில சட்ட நூல்களும் உதவிகளும் நமக்குத் தேவையில்லையா? — இப்படி ஒரு கேள்வியை இன்று பலர் கேட்கிறார்கள்.

இக்கேள்விக்குச் சரியான விடைகாண அதே வேதாகமத்தைத் தான் நாம் நாட வேண்டும். கர்த்தருடைய சுவிஷேத்தில் (வேதாகமம்) காணப்படாத வேறு சில காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரா என்பதை அறிய அவருடைய வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போமா?

''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறியவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' என்பதாக 2 தீமோத்தேயு 3:16, 17 வசனங்களில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம் நமக்கு எல்லா நற்கிரியைகளையும் கொடுப்பதாக இருப்பின், அதில் கூறப்படாத எந்தக் காரியத்தைச் செய்து தேவனை பிரியப்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார்?

''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்'' என யாக்கோபு 1:25ல் கூறப்பட்டுள்ளது. ''பூரணம்'' என்ற வார்த்தைக்கு **''எதுவும் விட்டுப் போகாத முழுமையான''** என பொருள். எதுவும் விட்டுப் போகாத முழுமையான வேதாகமத்தை நாம் கையில் வைத்துக் கொண்டு, தேவனுடைய விருப்பத்தை அறிய வேறு எந்த புதிய செய்தியை நாடி நாம் அலைய வேண்டும்?

''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய **யாவற்றையும்**, அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது'' என்பதாக பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார். (2 பேதுரு 1:3). ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஏற்கனவே தேவன் நமக்குத் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வேறு சட்ட நூல்கள் நமக்குத் தேவயைா? அல்லது வேறு எந்த உதவியை எதிர்பார்க்க வேண்டும்?

கர்த்தருடைய வசனம் சத்தியமானது. (யோவான் 17:7). வசனத்தைப் பூரணமாக தந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதில் நாம் நிலைத்திருப்போம்.

**Jerrie Barber** தமிழாக்கம்: எஸ். எஸ். ராஜன்.

# நான் விசுவாசிக்கிறேன் என்றாலும்...
# I Believe But...

நான் கர்த்தரை விசுவாசிக்கிறேன், என்றாலும் சில வேளைகளில் சந்தேகப்படுகிறேன். அவரை சந்தேகிப்பதற்காக வெட்கப்படவும் செய்கிறேன், என்றாலும் என் சந்தேகம் முற்றிலுமாக நீங்கிய பாடில்லை. நான் என்ன செய்யவேண்டும்?

இப்படி சிலர் தங்கள் சந்தேகத்தை மனந்திறந்து தெரிவிக்கின்றனர்.

விசுவாசத்தின் பிதா என அழைக்கப்படும் ஆபிரகாமைப்பற்றி இங்கு பார்க்கலாம்: "உன் வீட்டை விட்டு வெளியேறி நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என கர்த்தர் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்ட போது, அவன் அக்கட்டளைக்கு உடனே பணிந்தான் (ஆதி. 12:1-4). கர்த்தர் பேரில் ஆழ்ந்த விசுவாசத்துடன் (எபி. 11:8) அவரைத் தொடர்ந்தான்.

என்ற போதிலும், ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்குப் பின்னர் சாராளுக்கு ஒரு மகன் பிறப்பான் என ஆபிகாமிடம் கர்த்தர் கூறினார். அப்போது ஆபிரகாமுக்கு கிட்டதட்ட 100 வயதும், சாராளுக்கு 90 வயதும் இருக்கும், கர்த்தரின் கூற்றுக்கு ஆபிரகாம் பதில் என்னவாயிருந்தது? "அப்போது ஆபிரகாம் முகம் குப்புற விழுந்து நகைத்தது: நூறு வயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமா? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ?...." (ஆதி, 17:17). கர்த்தருக்கு சாராள் என்ன பதில் அளித்தாள்? "ஆகையால் சாராள் தன் உள்ளத்திலே நகைத்து நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ? என்றாள்" (ஆதி. 18:12).

கர்த்தருடைய வாக்குத்தத்தம் நடைமுறையில் கடினமானது என அறிந்து, ஆபிரகாமும் சாராளும் நகைத்த போதிலும், அவருடைய, கட்டளைக்குப் பணிந்தனர். தேவன் தனது வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றினார். அவர்களுடையவிசுவாசமும் வளர்ச்சி அடைந்து, ஈசாக்கை பலி கொடுக்கக் கோரும் கடினமான கட்டளையை கர்த்தர் பிறப்பித்த போது (ஆதி. 22) ஆபிரகாம் தயங்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்படிந்து அவர் சகலவற்றையும் நடத்துவார் என்று விசுவாசித்தன். (ஆதி 22:1-18; எபி. 11:17.19).

கர்த்தருடைய வசனத்தைத் தொடர்ந்து படியுங்கள். அவருக்குக் கீழ்ப்படியுங்கள்; கேள்விகளைக் கேளுங்கள்; உங்கள் சந்தேகங்கள் யாவற்றையும் நீக்கும் வரை, பதிலைத் தேடுங்கள். உங்கள் விசுவாசம் வளரட்டும்.

Jerrie Barber SSR

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 1 0049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. MM. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z.S. ராஜநாயகம்

*கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,*

*காங்கயம் - 638 701*

**Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Kangayam-638 701.**

**Editor. E.Z.S. Rajanayagam**

PRINTED MATTER

BOOK-POST

**TO**

If undelivered please return to:

The Editor

**THIRUMARAI AASAAN**

Dharapuram Road, KANGAYAM-638 701